தினமணி

லாபம் தரும் கத்தரி சாகுபடி!

First Published : 21 Jun 2012 12:00:00 AM IST



தருமபுரி: காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஜூன் முதல் டிசம்பர் வரையிலும் கத்தரி சாகுபடியில் வீரிய ஒட்டு ரகங்களைப் பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் என தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறை சார்பில் நீர்வள-நிலவளத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தண்ணீரை சிக்கனமாக செலவு செய்து வழக்கமான மகசூலைவிட கூடுதல் மகசூல் பெறும் நடைமுறைகள் இந்தத் திட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

வீரிய ஒட்டு ரகங்கள்: எம்ஹெச் 9, எம்ஹெச் 11, அப்சரா, என்.எஸ். 1720, ரவையா, பச்சைநீலம் ஆகிய வீரிய ஓட்டு ரகங்களை தேர்வு செய்து பயிரிடலாம்.

பருவம்: ஜூன் முதல் அக்டோபர் வரையிலும், டிசம்பர், ஜனவரி முதல் மே வரையிலும் உகந்த பருவமாக கருதப்படுகிறது. மேலும், ஹெக்டருக்கு 200 கிராம் விதையளவு போதுமானது.

விதை நேர்த்தி: டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம் வீதம் சேர்த்து கலக்க வேண்டும். அசோஸ் பைரில்லம், பாஸ்போபேக்டீரியா ஒவ்வொன்றையும் 100 கிராம் வீதம் கலந்து நிழலில் அரைமணி நேரம் உலர வைக்கவும். இத்தகைய விதை நேர்த்தி முறைகளை கையாளுவதன் மூலம் நோய் தாக்கத்திலிருந்து காக்க முடியும்.

இடைவெளி மற்றும் செடி எண்ணிக்கை: பொதுவாக ரகத்தின் தன்மைக்கு தகுந்தபடி இடைவெளி மற்றும் செடியின் எண்ணிக்கை மாறுபடும். மிதமான வளர்ச்சி உள்ள ரகங்களை 4 அடி

அகலமுள்ள மேட்டு பாத்தியில் இரட்டை வரிசை முறையில் 60-க்கு 60 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும்.

அதிக வளர்ச்சியுள்ள ரகங்களை உயர்பாத்தியில் ஒரு வரிசையில் செடிக்கு செடி 45 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும்.

நடவு முறை: நாற்றுகளை நடவதற்கு முன்பாக 8 முதல் 12 மணி நேரம் உயர்பாத்திகளை சொட்டுநீர்ப் பாசனத்தை பயன்படுத்தி நன்கு நனைக்க வேண்டும். நாற்றுகளை குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த ஒரு வராத்துக்குப் பிறகு இடைவெளி இருந்தால் புதிய நாற்றுகளை நட வேண்டும்.

நீர்ப்பாசனம்: தினமும் சொட்டுநீர்ப் பாசன முறையில் ஒரு மணிநேரம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தேவையான அளவு நீரில் கரையும் உரத்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் சொட்டுநீர்ப் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள உரத் தொட்டி மூலம் இட வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 200-15-100 கி.கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து அவசியமானது. நீர்வழி உரமாக 200-37.5-100 கி.கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து அவசியமானது.

உரங்கள்: சூப்பர் பாஸ்பேட், 19-19-19, 13-00-45, 12-61-00, யூரியா ஆகியவற்றை இடலாம். ஒரு ஹெக்டருக்கு 703 கிலோ சூப்பர் பாஸ்பேட்டு உரத்தை அடியுரமாக கடைசி உழவின்போது இட வேண்டும்.


பூச்சிகள்: காய்த்துளைப்பான், புள்ளி வண்ண்டு, வெள்ளை ஈ, அசுவினி, சிவப்பு சிலந்திபேன் ஆகியவை கத்தரியை தாக்கும் பூச்சிகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்த தோட்டக்கலைத் துறை பரிந்துரை செய்துள்ள மருந்துகளை குறிப்பிட்ட அளவு பயன்படுத்த வேண்டும்.

நோய்கள்:வெர்டிசிலியம் வாடல் நோய், போமாப்சிஸ் வாடல், பழ அழுகல், நாற்று அழுகல், பிஸ்சோரியம் வாடல் நோய், சாம்பல் நோய், சிற்றிலை நோய் தாக்கக் கூடும். தகுந்த மருந்துகளை பரிந்துரை அளவுக்கேற்ப தெளிப்பது அவசியமானது.

அறுவடை மற்றும் மகசூல்: ரகங்களுக்கு ஏற்றவாறு கத்தரி அறுவடை மாறுபடும். பொதுவாக 50 முதல் 120 நாள்கள் வரை மகசூல் அறுவடை செய்யலாம். வீரிய ஒட்டு ரகத்தில் ஹெக்டருக்கு 40 முதல் 50 டன்கள் வரை மகசூல் கிடைக்கும். மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள தோட்டக்கலைத் துறை வட்டார அலுவலகங்களை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

## விவசாயத்துக்கு கேடு விளைவிக்கும் எலிகளைக் கட்டுப்படுத்துவது எப்படி?

First Published : 21 Jun 2012 12:00:00 AM IST




புதுச்சேரி: விவசாயிகள் விளைவிக்கும் தானியங்கள், பெரும்பாலும் எலிகளால் பெரும் சேதம் அடைகின்றன. இதனால், விவசாயிகள் கடும் நஷ்டத்தை அடையும் சூழ்நிலை உண்டாகிறது. இந்த எலிகளை முறையான வழிகளை பயன்படுத்தி அழிக்கலாம். அவற்றை இங்கு காண்போம். தற்போது பகல் நேரத்தில் அதிக வெப்பநிலையும், இரவு நேரத்தில் குறைவான வெப்பநிலையும் நிலவி வருகிறது. இந்த வெப்பநிலை மாறுபாட்டால், வீட்டிலும், வயல்வெளிகளிலும், தென்னை தோப்புகளிலும் எலிகளின் தொல்லை அதிகமாக காணப்படுகிறது.

எலிகளால் ஏற்படும் சேதங்களையும், இழப்பையும் தடுக்க, வயல்களிலும், வீட்டிலும், தென்னைமர தோப்பிலும் ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும். எலிகளின் வகைகள் குறித்தும், அதை கட்டுப்படுத்தும் வழிகள் குறித்தும் பெருந்தலைவர் காமராஜர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை வல்லுநர் நி.விஜயகுமார் கூறியது: பொதுவாக எலிகளில் இரண்டு வகைகள் உண்டு. அவை, வயல் எலிகள் மற்றும் வீட்டு எலிகள் ஆகும்.

வயல் எலிகளிலும் கூட வளை எலி, புல் எலி, கெர்பில் எலி மற்றும் சுண்டெலி என நான்கு வகைகள் உண்டு. அதேபோல், சாதாரண வீட்டு எலி மற்றும் மர எலி போன்ற எலிகளும் உள்ளன. வயல் எலிகள், வயலில் உள்ள பயிர்களின் கதிர்களையும், தானியங்களையும், காய்கறி மற்றும் பழங்களையும் உண்பதோடு, அவைகளை அதிகமாக சேதப்படுத்தி விடும்.

ஆனால், வீட்டு எலிகளோ வீட்டில் உள்ள கூரை, பரண், மறைவான இடங்கள், சேமிப்பு அறைகள் மற்றும் சேமிப்பு கிடங்குகளில் உள்ள தானியங்கள், பயறு வகைகள், தீவனங்கள், காய்கறிகள்

ஆகியவற்றை சேதப்படுத்துகின்றன. மர எலியானது தென்னைமர இளம் காய்கள் மற்றும் இளநீர்களை வெட்டி சேதப்படுத்துகின்றன. மேலும் எலிகளின் கழிவுகளாலும், உணவுப் பொருள்கள் அசுத்தப்படுகின்றன. இதனால் நோய் பரவுமும் தன்மை உண்டாகின்றன.
எலிகளால் ஓர் ஆண்டுக்கு சராசரியாக 5-10 சதவிகிதம் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. ஓர் ஆண்டுக்கு எலிகளினால் 20 மெட்ரிக் டன் அளவு வயலிலும், 33 மெட்ரிக் டன் அளவு சேமிப்பு கிடங்குகளிலும் பாதிப்பு ஏற்படுகிறது.
மேலும் எலிகளால் மனித இனத்திற்கு பிளேக், ரேபீஸ், மஞ்சள் காமாலை, எலிக்கடி காய்ச்சல் போன்ற நோய்களும் பரவுகின்றன.
பொதுவாக எலிகளுக்கு தொடு உணர்வு, நுகர் உணர்வு, ருசி உணர்வு மற்றும் ஒலிகளை கேட்கும் உணர்வு மிகவும் அதிகம். சாதாரணமாக ஒரு ஜோடி எலிகள் ஒரு ஆண்டில் 6 முறை குட்டி போடுவதுடன், அவைகளின் வளர்ச்சி 6 மாதங்கள் வரை நீடிக்கும்.
நல்ல ஆரோக்கியமான 800 கிராம் முதல் ஒரு கிலோ எடையுள்ள எலிகள் 37 மாதங்கள் வரை உயிர் வாழும். எலிகள் ஒரு வருடத்திற்கு, சராசரியாக 20 குட்டிகளை ஈன்றெடுக்கும். எலிகளால் உணவு இல்லாமல் 7 நாட்களும், நீர் இல்லாமல் 2 நாட்களும் தாக்குப் பிடிக்க முடியும்.
ஒரு எலிக்கு நாளொன்றுக்கு 24 கிராம் உணவு தானியமும், 40 மி.லி. நீரும் தேவைப்படுகிறது.
எலிகளிடமிருந்து
உணவுப் பொருள்களை பாதுகாக்க...
வீடுகளின் ஓரம், சாலையோரங்கள், சேமிப்பு கிடங்குகளின் ஓரப்பகுதிகள் ஆகியவற்றில் குப்பைகளைக் கொட்டி வைக்கக்கூடாது. சேமித்து வைக்க வேண்டிய உணவுப் பொருள்களை, 45 செ.மீ உயரத்தில் பரன்கள் அமைத்தும் அல்லது பலகைகள் போட்டு கோணிப்பைகளில் கட்டியும் அடுக்கி வைக்கலாம். உணவுப் பண்டங்களை உலோகம் அல்லது பிளாஸ்டிக் கொள்கலன்களில் வைக்க வேண்டும். வீடு மற்றும் சேமிப்பு கிடங்குகளில் உள்ள சுவர், தரை, கதவு, ஜன்னல் போன்றவற்றில் உள்ள ஓட்டைகளை அடைக்க வேண்டும்.
எலிகளை கட்டுப்படுத்தும் வழிகள்
வயல்களில் எலிகளை பிடிக்க கூண்டுப் பொறி, கிடுக்கி பொறி, மூங்கில் வில் பொறி, தஞ்சாவூர் மூங்கில் வில் பொறி ஆகியவற்றில் ஏதாவது ஒரு பொறியை அமைக்கலாம். ஒரு எலி வளையில் அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகளை அரை கிராம் என்ற அளவில் வைக்கலாம்.
எலிகளை பிடிக்கும் உயிரினங்களான பூனைகளை வீட்டிலும், ஆந்தைகள், கீரிப்பிள்ளைகள், பாம்புகள் போன்றவற்றை வயலிலும் அழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வெண்மை நிறத் துணியை குச்சியில் கட்டியும், சிறிய மண் பானைகளின் மீது வெண் புள்ளிகள் வைத்தும் ஆந்தை பந்தம் அமைக்கலாம். வெள்ளை நிறத்தை கண்டால் எலிகள் அங்கிருந்து ஓடிவிடும்.
நஞ்சுணவை தயாரிப்பது எப்படி?

துத்தநாக பாஸ்பைடு 1 பங்கு, உணவுப் பொருள் 19 பங்கு சேர்த்து நஞ்சு உணவு உருவாக்கி ஒரு டீஸ்பூன் அளவில் ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து எலிகளை அழிக்கலாம். இரத்தம் உறையாமல் செய்யும் மருந்துகளை வைத்தும் எலிகளை கொல்லலாம். அதாவது, உணவுப் பொருள் (அரிசி, கேழ்வரகு, மாவு) 450 கிராம், சமையல் எண்ணெய் 10 கிராம், நாட்டுச் சர்க்கரை 15 கிராம், "வார்பரின்', ரோடாஃப்ரின், டோமோரின், புரோமோடைலான் 25 கிராம் ஆகியவை சேர்த்த நஞ்சு கலந்த இந்த உணவை 6 டீஸ்பூன் அளவுகளில், ஒவ்வொரு இடத்திலும் வைக்க வேண்டும்.

எலிகள் முழுவதும் அழியும் வரை தொடர்ந்து இந்த நஞ்சுணவை வைக்க வேண்டும். இது வீட்டு எலிகளை ஒழிக்க சிறந்த முறையாகும். மேலும் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒட்டுப் பொறிகளை வைத்தும் வீட்டு எலிகளை ஒழிக்கலாம்.

மேலும் உடைந்த அரிசி 93 கிராம், சர்க்கரை 3 கிராம், கடலை எண்ணெய் 2 கிராம், புரோமோடைலான், ரொபான் அல்லது ரேட்டால் 2 கிராம் சேர்த்து ஒவ்வொரு இடத்திலும் வைக்க வேண்டும்.

எலிகள் முழுவதும் அழியும் வரை தொடர்ந்து இந்த நஞ்சுணவை வைக்க வேண்டும். இது சேமிப்பு கிடங்குகளில் எலிகளை ஒழிக்க சிறந்த முறையாகும்.

உடைந்த கோதுமை 65 கிராம், வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரை 3 கிராம், 0.25 சதவீத புரோமோடைலான் 02 கிராம், பாரபின் மெழுகு 30 கிராம் என மேற்படி நஞ்சு கலந்த உணவினை 5 செ. மீ நீளம் மற்றும் 2.5 செ. மீ அகலம் என்ற அளவில் சிறிய சிறிய கேக்குகளாக வெட்டி 5 கேக்குகள் என்ற அளவில் பொந்துகள், வலைகள், தென்னை மரம் மேல், வீட்டின் கூரைகள் போன்ற இடங்களில் வைக்க வேண்டும்.

எலிகள் முழுவதும் அழியும்வரை இதை வைக்க வேண்டும். இந்த முறைகளை கையாண்டால் எலிகளை எளிதில் ஒழிக்கலாம் என்றார் அவர்.

## வெங்காயத் தாமரையில் "கம்போஸ்ட்' தயாரிப்பு

First Published : 20 Jun 2012 01:16:32 PM IST

வேதாரண்யம், ஜூன் 19: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் வடிகால் உள்ளிட்ட நீர்நிலைகளில் வளர்ந்துள்ள வெங்காயத் தாமரைச் செடிகளை அகற்றும் பணி நடந்து வருகிறது. அவற்றை மக்கச் செய்து கம்போஸ்ட் தயாரிக்கும் முயற்சியில் விவசாயிகள் சிலர் முனைப்பு காட்டி வருகின்றனர்.

வேதாரண்யம் பகுதியில் உள்ள முள்ளியாறு, மானங்கொண்டான் ஆறு, உள்ளிட்ட நீர்நிலைகளில் வளர்ந்துள்ள வெங்காயத் தாமரை (ஐபோமியா)எனும் களைச் செடிகள்

வடிகாலைப் பாதிக்கச் செய்வதுடன், தண்ணீரை மாசுப்படுத்தி, சுகாதாரக்கேடு ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது.

பலதரப்பு கோரிக்கையை ஏற்று, நூறுநாள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் களைச் செடிகளை அகற்றும் பணி அந்தந்த பகுதிக்குள்பட்ட ஊராட்சிகள் மூலமாக நடந்து வருகிறது.

அவ்வாறு அகற்றப்படும் செடிகள், ஆற்றின் கரை அல்லது அருகேயுள்ள வயல்களில் குவிக்கப்படுகின்றன. வீணாகக் குவிக்கப்படும் கழிவுகளைச் சிலர் உரமாக்குவதில் முனைப்பு காட்டி வருகின்றனர்.

வயலின் ஒரு பகுதியில் பல அடுக்கு முறையில் பரப்பி, யூரியாவை தெளித்து மண்ணால் மூடி கம்போஸ்ட் தயாரிப்பதில் விவசாயிகள் சிலர் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியதாக அமைந்துள்ளது.

இரண்டு டன் கம்போஸ்ட் உரம் 5 டன் தொழுவுரத்துக்கு இணையானது. மானாவாரி மற்றும் களர், உவர் நிலங்களுக்கு மிகவும் ஏற்றது. மக்கிய கம்போஸ்டில் நுண்சத்துக்கள், இரண்டாம் நிலை, முதன்மைச் சத்துக்கள் அளவு அதிகமாக உள்ளது.

மேலும், முழுமையான தொழில்நுட்ப உதவிகளை விவசாயிகளுக்கு அளித்தால் வீணாகும் களைச் செடிகள் முழுவதையும் கம்போஸ்டாக மாற்றுவதுடன், குவிக்கப்படும் செடிகளால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்: நெல் உற்பத்தியாளர்கள் குழு வலியுறுத்தல்

First Published : 21 Jun 2012 09:34:57 AM IST

புதுச்சேரி, ஜூன் 20: புதுச்சேரியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும் என நெல் உற்பத்தியாளர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பாகூரைச் சேர்ந்த நெல் உற்பத்தியாளர் குழுவின் தலைவர் ரா. மணவாளன் வெளியிட்ட அறிக்கை:

நெல்லுக்கான புதிய ஆதரவு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 170-ஐ மத்திய அரசு உயர்த்தியுள்ளது. நெல்லுக்கான ஆதார விலை ரூ. 1250 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி அரசு, இதனை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அனைத்து ஒழுங்கு முறை விற்பனை கூடங்களிலும், நெல்லின் ஆதரவு விலைபட்டியல் வைக்க வேண்டும்.

ரசாயன உரங்களின் விலை உயர்வை ரத்து செய்து உரத்தட்டுப்பாட்டை நீக்கிட மத்திய மற்றும் மாநில அரசுகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து, விவசாயிகளே நேரடிக் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் அதிகமாக பயிரிடும் பாகூர் பகுதியில் ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.
 விவசாயிகளுக்கு மாதாந்திர ஊக்கத் தொகையை அரசு வழங்க வேண்டும். விவசாயம் சார்ந்த அனைத்து கடன்களையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஈமு கோழி வளர்ப்பு: ஆட்சியர் எச்சரிக்கை

First Published : 19 Jun 2012 01:19:14 PM IST

நாமக்கல், ஜூன் 18: ஈமு கோழி வளர்ப்பில் பொதுமக்கள் கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.
 இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாமக்கல் மாவட்டத்தில் இப்போது ஈமு கோழிப்பண்ணை தொழில் வேகமாகப் பரவி வருகிறது. பல்வேறு நிறுவனங்கள் ஈமு கோழி வளர்ப்பு தொழில் குறித்தும், அதில் முதலீடு செய்தால் பெருத்த லாபம் கிடைக்கும் என்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்து வருகின்றன.
 இதன்படி, குறிப்பிட்ட திட்டங்களின் கீழ், ஈமு கோழி வளர்ப்பில் முதலீடு செய்தால் ஊக்கத் தொகை, தங்க நாணயங்கள், இருசக்கர வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் பரிசுகள் வழங்கப்படும் எனவும், இரு ஆண்டுகள் கழித்து முதலீடு செய்த தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அந்த விளம்பரங்களில் இடம்பெற்றுள்ளன.
 எனினும், இந்தத் தொழில் குறித்த அடிப்படை விவரங்கள், சந்தை வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் அந்த விளம்பரங்களில் இடம்பெறவில்லை. எனவே, பொதுமக்கள் இத்தகைய கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி முதலீடு செய்யாமல், அந்தத் தொழில் குறித்த முழுமையான விவரங்களை அறிந்த பிறகே முதலீடு செய்ய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு

First Published : 21 Jun 2012 03:03:49 AM IST



சென்னை, ஜூன் 20: தமிழகத்தில் வியாழக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
தமிழகத்தின் சில பகுதிகளில் சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தென்மேற்குப் பருவமழையின் காரணமாக கேரள எல்லையோர பகுதிகளில் மழை பெய்து வருகிறது. பருவமழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் சில இடங்களில் பரவலான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
சென்னையைப் பொறுத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மழையோ இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. வெப்பநிலை 100 டிகிரியை ஒட்டியிருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் பெய்த மழை அளவு (புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரம் - சென்டி மீட்டரில்): சின்னக் கல்லாறு - 10, வால்பாறை - 7, பெரியாறு அணை - 3, பேச்சிப்பாறை, நீலகிரி மாவட்டம் தேவலா, நடுவட்டம் தலா 1.

கரும்பு கொள்முதல் தொகையை தாமதமின்றி வழங்கக் கோரிக்கை
First Published : 20 Jun 2012 12:36:08 PM IST

அரக்கோணம், ஜூன் 19: கரும்பு கொள்முதல் தொகையை திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு தாமதமின்றி வழங்கி, கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் வட்டியில்லா கடன் சலுகையை பெற உதவ வேண்டும் என வேலூர் மாவட்ட பாரதீய கிசான் சங்க கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இச் சங்கத்தின் கூட்டம் மாவட்டத் தலைவர் எஸ்.கணேசன் தலைமையில் தக்கோலத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் பாரதீய கிசான் சங்க செயலரும், மாநில கரும்பு விவசாயிகள் பிரிவு ஒருங்கிணைப்பாளருமான சி.முனுசாமிரெட்டி, நடராஜமுதலியார், கே.பெருமாள், சுப்பிரமணி, குமார், ஈசாபாய், சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**திராட்சை விலை உயர்வு**

ஜூன் 20,2012,12:45



கம்பம் : தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில், சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சைக்கு கூடுதல் விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில் பல்லாயிரம் ஏக்கரில், திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. மழை மற்றும் பனிக் காலங்களில் திராட்சையில் சாம்பல் நோய், செவட்டை நோய் தாக்கி கடும் சேதத்தை ஏற்படுத்தும். தற்போது நோய் தாக்கம் இல்லாவிட்டாலும் விளைச்சல் குறைவாகவே உள்ளது.

திராட்சை விலை கிலோவிற்கு ரூ.35 வரை கிடைத்து வருகிறது. கடந்த வாரம் வரை கிலோவிற்கு ரூ. 28 தான் கிடைத்தது. நாளுக்கு நாள் விலை அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில்

உள்ளனர். திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறியதாவது: பொதுவாக இந்த மாதங்களில் அதிக விலை கிடைப்பது வழக்கம் தான். இன்னும் சில மாதங்களுக்கு இந்த விலை கிடைக்கும். விளைச்சல் இல்லாததால், விலை கிடைத்தும் விவசாயிகளுக்கு பலன் இல்லை. தென்மேற்கு பருவமழை பெய்யத் துவங்கியுள்ளதால், இதனால் சாம்பல் நோய் தாக்கும் அபாயம் உள்ளது, என்றார்.

**பெட்ரோல் விலை போல் உர விலையும் உயர்வு**

ஜூன் 20,2012,12:21



மதுரை: மூலப்பொருட்களின் விலை உயர்வு, அரசின் குறைந்த மானியம் போன்ற காரணங்களால் உரவிலை, பெட்ரோல் விலையை போல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சர்வதேச அளவில் விலை உயர்வு, அமெரிக்கா டாலருக்கான இந்திய ரூபாயின் மதிப்பு குறைவு போன்ற காரணங்களால், உரவிலை அதிகரித்து வருகிறது. முன்பு, விலை உயர்ந்தாலும், அதற்கேற்ப மத்திய அரசு மானியம் அளித்து, விலை உயர்வை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தற்போது, குறிப்பிட்ட அளவு மானியம் மட்டும் தரும் மத்திய அரசு, விலை உயர்வுக்கு ஏற்ப, உரவிலையை உயர்த்த உரம் தயாரிப்பு நிறுவனங்களுக்கு "பச்சைக்கொடி' காட்டியது. இதனால் 2009ல் ரூ.486க்கு விற்ற ஐம்பது கிலோ டிஏபி உரம், 2010ல் ரூ.507, 2011ல் ரூ.643, தற்போது ரூ.1250க்கும், கலப்பு உரம் ரூ.316லிருந்து முறையே ரூ.347, ரூ.476, ரூ.857க்கும், பொட்டாஷ் உரம் ரூ.206லிருந்து முறையே ரூ.219, ரூ.299, ரூ.840க்கும் விற்கப்படுகிறது. மதுரையில் கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், 20 20 காம்பளக்ஸ் உரம் ரூ.545லிருந்து ரூ.858க்கும், சூப்பர் பாஸ்பேட் ரூ.220லிருந்து ரூ.362க்கும் விற்கப்படுகிறது. யூரியா மட்டும் ரூ.268 என்பதில் மாற்றமில்லை. மற்ற உரவிலையை காட்டிலும் யூரியா விலை குறைவாக இருப்பதால், அதை விவசாயிகள் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

ஐந்து மாவட்ட விவசாய சங்கத் தலைவர் அப்பாஸ் கூறியதாவது : முன்பு, ஆடு, மாடு வளர்த்து இயற்கை உரத்திற்கு வழிவகுக்கப்பட்டது. ஆனால், தற்போது அதை பராமரிப்பது சிரமம்

என்பதால், ரசாயன உரங்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. உரவிலை உயர்வுக்கு மத்திய அரசின் இறக்குமதி கொள்கை, உரத்தேவையை பூர்த்தி செய்ய திட்டமிடாததே காரணம். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதாலும் தொடர்ந்து விலை அதிகரிக்கிறது. தனியார் நிறுவனங்களுக்கு மானியம் கொடுத்து விவசாயிகளுக்கு உரத்தை விற்பதற்கு பதில், அரசே நேரடியாக விற்க வேண்டும். உரவிலையை உயர்த்தும் முன், விவசாயிகளிடம் ஆலோசிக்க வேண்டும். ஆனால் விவசாயிகளின் நலனை கருதுவதில்லை. கேரளாவில் குறைந்த விலையில் உரம் கிடைக்க, விவசாயிகளுக்கு தனி கார்டு வழங்கப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தில் மானிய விலையில் உரம் தந்தாலும், விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் கூறுகையில், ""ரசாயன உரத்தை கைவிட்டு, விவசாயிகள் இயற்கை உரத்திற்கு மாறவேண்டும். செலவும், பராமரிப்பும் குறைவு. நிலம் மலட்டுத்தன்மையற்றதாக இருக்கும். விவசாயிகளும் கடன்படமாட்டார்கள்," என்றார்.

**உழவர் பாதுகாப்பு அட்டைபெற்றவர்கள் குறித்த சர்வே**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2012,02:57 IST

கருத்தை பதிவு செய்ய

தேவதானப்பட்டி:தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில், அடையாள அட்டை பெற்றவர்களின் நிலை குறித்து, வருவாய்த்துறை அதிகாரிகள் சர்வே செய்து அரசுக்கு அறிக்கை தர உள்ளனர். தமிழக முதல்வர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் அடையாள அட்டை பெற்றுள்ளவர்களுக்கு விவசாய நிலம் இருக்க வேண்டும். அல்லது விவசாயம் சார்ந்த தொழில் செய்பவராக இருக்க வேண்டும். குடும்ப தலைவர் இயற்கை மரணம் அடைந்தாலோ, விபத்தில் இறந்தாலோ, நிதி உதவி கிடைக்கிறது. பிள்ளைகளின் படிப்பு செலவிற்கு பணம், திருமணத்திற்கு உதவி கிடைக்கிறது.புள்ளிவிபரம் சேகரிப்பு: இத்திட்டத்தில் தற்போது அடையாள அட்டை பெற்றுள்ளவர்களின் குடும்பத்தில் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை, வயது, ஆண், பெண் எண்ணிக்கை, 18 வயதுக்குள் படிக்கும் குழந்தைகள் எண்ணிக்கை, உழைக்கும் திறன் உள்ளவர்களா, எவ்வகையான தொழில் செய்கிறார்கள், அரசு அல்லது தனியார் வேலையா, உழைக்கும் திறன் அற்றவரா, சொந்தமாக விவசாய நிலம் உள்ளதா, போன்ற பல்வேறு புள்ளி விபரங்களை வருவாய்த்துறையினர் சேகரித்து வருகின்றனர். இதன் அடிப்படையில் முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உதவி பெறுவதற்கு தகுதியானர்கள், தகுதியற்றவர்கள் என்ற பட்டியலை அரசுக்கு அனுப்பி வைக்க உள்ளனர்.

**சிவகங்கையில் காய்கறி விலை கிடு கிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2012,00:10 IST

கருத்தை பதிவு செய்ய

சிவகங்கை:சிவகங்கை வாரச்சந்தைக்கு காய்கறி வரத்து குறைவால்,விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சிவகங்கையில் புதன் தோறும் நடக்கும் சந்தைக்கு கோவை, உடுமலைப்பேட்டை, தேனி, மதுரை, கொடைக்கானலில் இருந்தும், சிவகங்கை அருகேயுள்ள இடையமேலூர், சாலூர், கண்டாங்கிபட்டி, கூட்டுறவுபட்டி, மலம்பட்டி, சுற்றுப்புற கிராமங்களில் விளையும் காய்கறி வரத்து இருக்கும். கடந்த சில வாரங்களாக உள்ளூர் காய்கறிகள் வரத்து இல்லை. வெளியூர்களில் இருந்து வரும் மலைக் காய்கறி வரத்தும் குறைந்துவிட்டது.இதனால் சந்தையில் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துவிட்டன.
தற்போது, ஆனியில் முகூர்த்த நாட்கள் அதிகளவில் வருவதாலும், விலை உயர்ந்துள்ளன. விலை விபரம் (கிலோவில்): உருளை- 30, முருங்கை பீன்ஸ் - 60, கேரட் - 60, பீட்ரூட் 40, கருணை - 10,பெரிய வெங்காயம் - 20, சின்ன வெங்காயம் - 30,அவரை - 60,தக்காளி- 20, பட்டர், சோயா பீன்ஸ் - 120, முள்ளங்கி - 30, டர்னிப் - 40, நூக்கல் - 40, புடலை - 30, கத்தரி - 30, வெண்டை - 20, பச்சை பட்டாணி - 80 ரூபாய் வரை விற்கின்றன. மாம்பழம்: திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் இருந்து மாம்பழ வரத்துள்ளது. நடப்பாண்டு, விளைச்சல் குறைந்து விட்டதால் விலையும் அதிகரித்துவிட்டன. சப்பட்டை (கிலோ)-40 , மல்கோவா - 50, காசா - 30, கல்லாமை - 20 ரூபாய்க்கு விற்றன. சிவகங்கை சந்தையில் காய்கறிகள் விலை அதிகரித்து வருவதால், பொதுமக்கள் அதிக விலை கொடுத்து வாங்க முடியாமல் திணறுகின்றனர்.

**வீடுகள், தோட்டங்களில் விரால் மீன் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2012,02:44 IST

கருத்தை பதிவு செய்ய

திருநெல்வேலி:புதுடில்லி பயோ டெக்னாலஜி துறை மூலம் வீடுகள் மற்றும் தோட்டங்களில் விரால் மீன் வளர்ப்பு மற்றும் அதன் மூலம் வருவாய் ஈட்டுதல் குறித்து பாளை., சேவியர் கல்லூரி நீர்வாழ் உயிரின ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் சார்பில் சுய உதவிக்குழு, கிராமப்புற மக்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.புதுடில்லியிலுள்ள பயோ டெக்னாலஜி துறை மூலம் வீடுகள் மற்றும் தோட்டங்களில் விரால் மீன் வளர்த்தல், அதன் மூலம் வருவாய் ஈட்டுதல் குறித்து பின்தங்கிய மக்களுக்கு பயிற்சி அளிக்க நிதியுதவி வழங்கிவருகிறது. இந்த பயிற்சி

ஆண்டிற்கு 60 பேர் வீதம், 3 ஆண்டிற்கு 180 பேருக்கு அளிக்கப்படவுள்ளது. பயிற்சிக்கு தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு 3 நாள் இலவச பயிற்சியும், பயிற்சிக்கான பொருட்களும், உணவு, போக்குவரத்து செலவு வழங்கப்படும். பயிற்சிக்காக ரூ.17 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்ட மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதுகுறித்த கலந்துரையாடல் கூட்டம் சேவியர் கல்லூரியில் நடந்தது.சேவியர் கல்லூரி நீர்வாழ் உயிரின ஆராய்ச்சி இயக்குனர் ஹனிபா வரவேற்றார். சேவியர் கல்லூரி செயலாளர் ஆரோக்கியசாமி, முதல்வர் ஜோசப் முன்னிலை வகித்தனர். உறுப்பினர்கள் பாண்டியன், தூத்துக்குடி மீன் வள மருத்துவக் கல்லூரி முதல்வர் (ஓய்வு) சுந்தர்ராஜ், ஆழ்வார்குறிச்சி பரமக்கல்யாணி கல்லூரி பேராசிரியை விஜயலெட்சுமி, தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரி முதல்வர் வீரபாகு, பரமக்கல்யாணி பேராசிரியர் விஸ்வநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆராய்ச்சி மாணவி ஜெயஷீலா நன்றி கூறினார்.பயனாளிகளுக்கு திட்டம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.பயிற்சி குறித்து பேராசிரியர் டாக்டர் டி.ஜெ.பாண்டியன் கூறுகையில், "விரால் மீன் வளர்ப்பு பயிற்சி பயனாளிகளுக்கு பயனுள்ளதாக அமையும். பயிற்சிக்கு பிறகு மீன் குஞ்சுகள் வாங்குவது குறித்தும், அதற்கான உணவுப் பொருட்கள் வாங்குவது குறித்தும் ஆலோசனை வழங்கப்படும். தேசிய வங்கிகள் சார்பில் கடனுதவி பெறவும், மீன்வளர்ப்பு தொழில் மூலம் வருவாய் ஈட்டவும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபட ஒரு சென்ட் நிலம் போதுமானது. தரை களிமண்ணாக இருக்கவேண்டும். குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. ஒரு சென்ட் நிலத்தில் 50 முதல் 70 விரால் மீன்களை வளர்க்க முடியும். மீன்களை வளர்க்க குழிதோண்டுவதற்கான யோசனை மற்றும் தேவையான உதவிகளை ஆராய்ச்சி மாணவர்கள் செய்துதருவர். தண்ணீரில் இருந்து இந்த மீனை எடுத்து தரையில் வைத்து தண்ணீர் தெளித்தால் 30 மணி நேரம் வரை உயிருடன் இருக்கும். மீன்களை வளர்க்க வீட்டில் மிஞ்சிய சாப்பாடு கழிவுகள், இறைச்சி கழிவுகள் மிக்சியில் அரைத்து மீன்களுக்கு உணவாக கொடுக்கலாம்.

இந்த மீனை விற்பனை செய்து நல்ல வருமானம் ஈட்டலாம். இந்த மீனில் இருந்து பல வகையான உணவுப் பொருட்கள், தோல் பொருட்கள் செய்யலாம். மீனில் இருந்து எடுக்கப்படும் எண்ணை மூட்டுவலி, புண்களை ஆற்றுதல் போன்றவற்றிற்க்கு சிறந்த மருந்து. பிரசவித்த பெண்களுக்கு வயிற்று புண் ஆற்ற இந்த மீனில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து சிறந்தது. வெளிநாடுகளில் பிரசவித்த பெண்கள் இந்த மீனில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்தை பயன்படுத்துகின்றனர்.இந்த மீன் வளர்ப்புக்கு மத்திய, மாநில அரசுகளும் பல்வேறு வகைகளில் உதவி வருகின்றன. இந்த மீன் வளர்ப்பு பயிற்சியை பெற்று பொதுமக்கள் பயன்பெறவேண்டும்.இவ்வாறு பாண்டியன் கூறினார்.

**வேளாண்மை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2012,02:38 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி:தென்காசி கோட்ட அளவிலான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி கோட்ட அளவிலான வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு மற்றும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டங்கள் பற்றிய புத்தூட்ட பயிற்சி முகாம் செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

வட்டார புள்ளி இயல் ஆய்வாளர் இசக்கி வரவேற்றார்.தென்காசி கோட்ட புள்ளி இயல் அலுவலர் ஆலி செய்யது சிராசிதின் பாவா பயிற் மதிப்பீட்டாய்வு மற்றும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டங்களின் நோக்கங்கள், செயல்முறைகள் பற்றி விளக்கினார். வருவாய் துறை, வேளாண்மை துறை மற்றும் புள்ளி இயல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும், கடந்த பசலியில் ஏபட்ட குறைபாடுகளை களைந்து நடப்பு பசலியில் தவறுகள் ஏற்படாதவாறு சிறந்து முறையில் திடல் தேர்வு மற்றும் படிவங்கள் பிழையின்றி பூர்த்தி செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.
கீழப்பாவூர் வட்டார புள்ளி இயல் ஆய்வாளர் மலர்விழி கிராம பதிவேடுகள் மற்றும் அடங்கலில் சர்வே சப்-டிவிஷன் எண்களை கண்டறிதல் பற்றி பயிற்சி அளித்தார். கடையநல்லூர் வட்டார புள்ளி இயல் ஆய்வாளர் சண்முகவேல் பரிசோதனை வயலில் திடல் தேர்வு செய்யும் முறைகளையும் படிவங்களை பூர்த்தி செய்வது பற்றியும் விளக்கினார்.தென்காசி பயிர் மேம்பாட்டு திட்ட ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணியன், சேக்மைதீன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், சிக்கந்தர் அமீர் செய்திருந்தனர்.

**நடப்பாண்டில் விவசாயிகளுக்கு ரூ. 70 கோடி வட்டியில்லா கடன்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2012,01:23 IST

கருத்தை பதிவு செய்ய

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 70 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்க கூட்டுறவுத்துறை முடிவு செய்திருப்பதாக இணைப்பதிவாளர் பாண்டியன் தெரிவித்தார்.தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாக கடன் வழங்கவும், பல்வேறு உதவி திட்டங்கள் செயல்படுத்தவும் கலெக்டர் ஆஷீஷ்குமார் உத்தரவின் பேரில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) பாண்டியன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.கடந்த ஆண்டு இம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடனாக 61 கோடி ரூபாய் வழங்கப்பட்டு அதில் 86 சதவீத கடன் விவசாயிகளிடம் இருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள பணத்தையும் முழு அளவில் பெறுவதற்கு வேண்டிய பணிகளில் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் ஈடுபட்டு கொண்டிருக்கின்றனர்.

இந் நிலையில் நடப்பாண்டில் கூட்டுறவுத்துறை மூலம் விவசாயிகளுக்கு 70 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட உள்ளதாக தூத்துக்குடி மா வட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாண்டியன் தெரிவித்தார்.இது குறித்து அவர் கூறியதாவது; குறுகிய காலத்தில் செலுத்தும் வட்டியில்லா கடன் 70 கோடி ரூபாயிற்கு வழங்கப்பட உள்ளன. விரைவாக இதனை விவசாயிகளுக்கு கொடுக்கும் வகையில் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கும் அறிவுரை வழங்கப்பட்டு அதற்கான பணிகள் துவங்கியுள்ளது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் 9 கோடி ரூபாய் கூடுதலாக விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார். பணியாளர் அலுவலர் சுகுமார், பொதுவிநியோக திட்ட துணைப்பதிவாளர் ஜெயசிங் ஆகியோர் உடனிருந்தனர்.

---

தினகரன்

பஞ்சு எடுக்கும் கருவி செயல்விளக்க பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-06-21 10:14:53

நீடாமங்கலம்: நீடாமங்கலம் அடுத்த குடவாசல் சிமிழி கிராமத்தில் பருத்தி பஞ்சு எடுக்கும் கருவியின் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.
பருத்தி சாகுபடியில் தற்போது, கையால் பருத்தியை எடுக்க கூலியாட்கள் தேவை அதிகரித்து வருவதோடு அவர்களுக்கு ஆகும் செலவு அதிகரித்து வருகிறது. மேலும், கையால் எடுக்கப்படும் பருத்தியில் இலைச்சருகு, கல் மற்றும் மண் போன்றவை கலந்துவிடுகிறது. எனவே, பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி மிக அத்தியாவாசியமான ஒன்று.
நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் குடவாசல் வட்டாரம் சிமிழி கிராமத்தில் பருத்தியில் பஞ்சு எடுக்கும் கருவி குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய தலைவர் செங்குட்டுவன் தலைமை வகித்தார்.
உதவி பேராசிரியர் காமராஜ் காண்பித்து பேசுகையில், 'கருவியின் எடை 750 கிராம், இது பேட்டரியால் இயக்கலாம், நாளொன்றுக்கு 100 முதல் 200 கிலோ வரை பஞ்சை எடுக்கும் என்றார்.பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்து உதவி பேராசிரியர் செந்தில்குமார் பேசினார். முன்னோடி விவசாயிகள் 56 பேர் கலந்துகொண்டனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-06-21 10:13:48

காரைக்கால்: காரைக்கால் மாதூர் வே ளாண் அறிவியல் நிலையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் நோய் களின் பராமரிப்பு முறைகள் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜயக்குமார் தலைமை வகித்து, பயிற்சி யை துவங்கி வைத்தார். நிலையத்தின் கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் கோபு, புறக்கடை யில் நாட்டுக்கோழிகளை வளர்க்கும் முறை, இளங்கோழிக் குஞ்சுகளை தாக்கும் நோய்கள் மற்றும் நோயி லிருந்து குஞ்சுகளை காக்கும் முறை குறித்து விளக்கினார்.